FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

UNDER SECTION 173 BNSS

C 8129834

1. District : Madurai PS: V K AC Year: 2025 FIR No.: 142/25 Date: 04/06/25
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 (a) of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 27.05.25 at about 16:30 hrs Date to : 30.05.25 at about 11:30 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 02.06.25 at about 17:00 hrs

Time Period : Time from : Time to : 04.06.25 at about 17:00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 04.06.2025 Time : 19:20 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 04.06.2025 Time : 20:45 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 2 kms, South East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : O/o the Tahsildar, Madurai South, Collectorate Campus, Madurai
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : Madurai
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. Balamurugan (b) Father's/ Husband's Name : Meenakshi Sundaram
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 01/04/79 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Supervisor TASMAC (g) Address : Door.No.415 – A.A. Road Rathinapuram, Madurai-11.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) Tr. Rajasekaran, Firka Surveyor, Aranyapuram, Madurai

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— Nil —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Sir,
In this regard Seperate Printed Sheets Pages 3 to 8 are enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M.Bally 04/06/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
04/06/25

15. Date & Time of despatch to the court: 04.06.25 22:00hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P.M. Ramesh
Rank: நிலை Inspector of Police No. எண் .....
Vigilance & Anti Corruption
Madurai

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 04.06.2025-ஆம் தேதி இரவு 19.20 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை ரத்தினபுரம் A.A. ரோடு, கதவு எண்.4/5-ல் வசிக்கும் மீனாட்சி சுந்தரம் மகன் திரு. M.பாலமுருகன் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புனர் : M.பாலமுருகன், த.பெ. மீனாட்சி சுந்தரம், கதவு எண்.4/5, A.A.ரோடு, ரத்தினபுரம், மதுரை-11. பெறுநர் : காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, நான் ரத்தினபுரத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் தற்போது சென்னை, அரும்பாக்கம் டாஸ்மாக் கடையின் சூப்பர்வைசராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.10.2010ம் தேதியன்று நானும் எனது உடன்பிறந்த தங்கை பிரியா என்பவரும் கூட்டாக சேர்ந்து மதுரை தெற்கு வட்டம், அவனியாபுரம், கிராமம் ரீசர்வே எண். 520/1ல் உள்ள சுப்புலெட்சுமிநகர் என பெயரிடப்பட்ட மனைப்பிரிவில் 1700 சதுரடி பரப்பளவு உள்ள பிளாட் எண்.2-ஐ மதுரை சம்மட்டிபுரத்தை சேர்ந்த திரு.பிச்சை என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கினோம். அதனை அன்றையதினமே மதுரை இணை சார்பதிவாளர் அலுவலகம் எண்-4 ல் அந்த பிளாட்டில் வடக்குபுரம் உள்ள 824 சதுரடி இடத்தை எனது பெயரில் ஆவண எண்.12266/2010 பிரகாரமும், மேலும் அந்த பிளாட்டின் மற்றொரு பகுதியான 876 சதுரடி காலிமனையிடத்தை எனது தங்கை பிரியா அவர்களின் பெயரிலும் ஆவண எண்.12267/2010 பிரகாரமும் பதிவு செய்தோம். பின்னர் கடந்த 05.06.2024ம் தேதியன்று எனது தங்கை பிரியா அவர்களிடமிருந்து அவரது பெயரில் உள்ள மேற்படி 876 சதுரடி காலிமனையிடத்தை நான் ரூ.6,13,200/-க்கு விலைக்கு வாங்கி, அதனை அன்றையதினமே மதுரை இணை சார்பதிவாளர் அலுவலகம் எண்-4 ஆவண எண்.5628/2024 பிரகாரம் பதிவு செய்தேன். அந்த இடத்திற்கான புல எல்லைகளை அளந்து அதில் வீடு கட்டுவதற்காக கடந்த 21.02.2025ம் தேதியன்று இசேவை மையம் மூலமாக விண்ணப்பித்தேன். அதற்கான மனு எண்.2025/0123/24/012437 ஆகும். அதற்காக எனது செல்போன் எண்.95667 64991 கொடுத்திருந்தேன். இதுசம்மந்தமாக உங்களுக்கு தகவல் வரும் அந்தசமயத்தில் சம்மந்தப்பட்ட பிர்கா சர்வேயரை சந்தியுங்கள் என இசேவை மையத்தில் கூறினார்கள். பின்னர் கடந்த 12.04.2025ம் தேதியன்று காலையில் எனது செல்போன் எண்ணிற்கு மேற்படி மனு எண்ணை குறிப்பிட்டு குறுவட்ட நிலஅளவரால் எதிர்வரும் (12.04.2025)

தேதியில் புலதணிக்கை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதால், நிலம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தயார் நிலையில் வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது - வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறை - TNGOVT என குறுஞ்செய்தி வந்தது. பிறகு இதுசம்மந்தமாக என்னை யாரும் தொடர்புகொள்ளவில்லை. பின்னர் இதுசம்மந்தமாக சுமார் 10 நாட்கள் கழித்து விசாரித்து தெரிந்துகொண்டு மாலை சுமார் 05.00 மணிக்கு மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள தெற்கு தாலுகா அலுவலகத்தில் வைத்து எனது இடத்திற்குரிய பிர்கா சர்வேயர் திரு.ராஜசேகரன் அவர்களை சந்தித்து எனது செல்போன் எண்ணிற்கு வந்த குறுஞ்செய்தியை காண்பித்து விவரம் கேட்டேன். அதற்கு அவர் என்னிடத்தில் இது வழக்கமாக எல்லோருக்கும் அனுப்பும் செய்திதான், எனவே சுமார் 10 நாட்கள் கழித்து என்னை வந்து சந்தியுங்கள் எனக் கூறி அனுப்பிவிட்டார். பின்னர் சுமார் 10 நாட்கள் கழித்து ஒருநாள் மாலை சுமார் 04.30 மணிக்கு திரு.ராஜசேகரன் அவர்களின் அலுவலகத்திற்கு சென்று அவரை சந்தித்து, எனது இடத்தை அளந்து புல எல்லைகளை நிர்ணயித்து அதற்கான சான்றினை தரும்படி கேட்டேன். அதற்கு அவர் என்னை வரும் வியாழக்கிழமை அன்று அவனியாபுரம் விஏஓ அலுவலகத்திற்கு காலை 11.00 மணிக்கு வந்து அவரை சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார். பிறகு அந்த வியாழக்கிழமை காலை சுமார் 07.00 மணிக்கு திரு.ராஜசேகரன் அவரது செல்போன் எண்.90433 43732-லிருந்து எனது செல்போன் எண்ணிற்கு தொடர்புகொண்டு என்னை 11.00 மணிக்கு அவனியாபுரம் விஏஓ அலுவலகத்திற்கு எனது இடத்திற்கான ஆவணங்களுடன் வரும்படி கேட்டுக்கொண்டார். நான் சரியென அவரிடம் கூறினேன். பிறகு அன்றையதினம் காலை 11.00 மணிக்கு அவனியாபுரம் விஏஓ அலுவலகத்திற்கு சென்று பிர்கா சர்வேயர் திரு.ராஜசேகரனை சந்திப்பதற்காக காத்திருந்தேன். அன்று மதியம் சுமார் 01.00 மணிவரை திரு.ராஜசேகரன் அவர்கள் அங்கு வரவில்லை. அவரது செல்போன் எண்ணிற்கு எனது செல்போன் எண்ணிலிருந்து தொடர்புகொண்டபோது அவர் அதனை எடுக்கவில்லை. பின்னர் மறுநாள் மாலை சுமார் 05.00 மணிக்கு மதுரை கலெக்டர் அலுவலகத்தில் உள்ள திரு.ராஜசேகரன் அவரது அலுவலகத்திற்கு சென்று அவரை சந்தித்து எனது இடம் அளப்பது மற்றும் அதற்கான சான்று சம்மந்தமாக கேட்டபோது அவர் என்னிடம் தான் வேறு அலுவல் காரணமாக நேற்று வரவில்லை என்றும், இதுசம்மந்தமாக எனது செல்போனிற்கு செய்தி வரும், அப்பொழுது வந்து என்னை பாருங்கள் என கூறிவிட்டார். நானும் சரியென்று வந்துவிட்டேன். கடந்த 11.05.2025ம் தேதியன்று எனது

செல்போன் எண்ணிற்கு காலை 09.38 மணிக்கு அன்புடையீர், வணக்கம் தாங்கள் சமர்பித்த மனு எண் (2025/0123/24/012437)-ன்படி புல எல்லை அளந்து காண்பிக்கப்பட்டது. தங்களின் (1) ஒப்புதல் வாக்குமூலம் (2) புலப்படம் ஆகியவற்றை http://eservice.tn.gov.in என்ற இணையதளத்தில் மனு எண்ணை உள்ளீடு செய்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். - வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை என குறுஞ்செய்தி வந்தது. பிறகு அந்த இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தபோது அந்த இடத்திற்கான புலப்படம் மட்டும் கிடைக்கப்பெற்றது. இதுசம்மந்தமாக திரு.ராஜசேகரன் அவர்கள் எனது இடத்தின் புல எல்லைகளை அளந்து காண்பிக்கவில்லை. மேலும் அவர் இதுசம்மந்தமாக எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை. இதுசம்மந்தமாக அன்றையதினமே நான் எனது செல்போன் எண்ணிலிருந்து திரு.ராஜசேகரன் அவர்களின் செல்போன் எண்ணிற்கு தொடர்புகொண்டபோது அவர் எடுக்கவில்லை. நானும் எனது வேலை காரணமாக சென்னையிலிருந்து மதுரைக்கு வர இயலவில்லை. பின்னர் கடந்த 27.05.2025 தேதியன்று மாலை சுமார் 04.30 மணிக்கு நான் மதுரை கலெக்டர் அலுவலகத்தில் உள்ள திரு.ராஜசேகரன் அலுவலகத்திற்கு சென்று திரு.ராஜசேகரன் அவர்களை சந்தித்து கடந்த 11.05.2025ம் தேதியன்று எனக்கு வந்த குறுஞ்செய்தியை காண்பித்து அவரிடம், நீங்கள் எனது மனையடியை என் முன்னால் அளந்து காண்பிக்கவில்லை, என்னிடம் ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை ஆனால் குறுஞ்செய்தி இவ்வாறு வந்திருக்கிறதே எனக் கூறினேன். அதற்கு அவர் என்னிடம், அவரால் வேலை பளு காரணமாக எனது இடத்தின் புல எல்லைகளை உடனே அளந்து காண்பிக்க இயலவில்லை, புல எல்லைகளை அளப்பது சம்மந்தமான மனுக்களை 90 நாட்களுக்குள் அவர் முடித்து அதற்கான அறிக்கையை தரவேண்டுமாம், ஆனால் எனது இடத்தை அளக்க இயலாததால் அவர் அதை தற்காலிகமாக கடந்த 11.05.2025ம் தேதியன்று முடித்துவிட்டதாகவும், அதைபற்றி கவலைபட வேண்டாம், நீங்கள் மீண்டும் ஆன்லைனில் அந்த மனையடிக்கான எல்லைகளை அளப்பது சம்மந்தமாக மனு செய்துவிட்டு பணம் ரூ.3,500/- உடன் என்னை வந்து பாருங்கள் நான் நல்லபடியாக முடித்து தருகிறேன் எனக் கூறி, எதற்கும் வரும் 30.05.2025ம் தேதியன்று என்னை அவனியாபுரத்தில் உள்ள விஏஒ அலுவலகத்திற்கு காலை சுமார் 11.00 மணிக்கு வந்து அவரை சந்திக்கும்படி கூறினார். நான் உடனே ரூ.3,500/- அரசுக்கு செலுத்தவேண்டிய பணமா என்றேன். உடனே அவர் அது, அவரது சொந்த செலவிற்கு என்று தெரிவித்தார். நான் அவரிடம் தற்போது

என்னிடம் பணம் இல்லை. பிறகு வந்து பார்க்கிறேன் என கூறிவிட்டு வந்துவிட்டேன். பின்னர், நான் கடந்த 30.05.2025ம் தேதியன்று காலை சுமார் 11.00 மணிக்கு அவனியாபுரம் விஏஓ அலுவலகத்திற்கு சென்று திரு.ராஜசேகரனை சந்திப்பதற்காக காத்திருந்தேன். அவர் சுமார் 11.30 மணிக்கு அங்கு வந்தார். அப்போது, அவர் என்னிடம் பணம் நான் கேட்டபடி கொண்டு வந்திருக்கிறீர்களா எனக் கேட்டார். நான் அவரிடம் பணத்தை கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்றேன். அதற்கு, அவர் ரூ.500/-யை குறைத்து கொண்டு ரூ.3,000/- கொடுங்கள் என்றார். மேலும், அவர் என்னிடம் என்னுடைய இடத்திற்கு அவரை அழைத்து செல்லுங்கள் எனக் கூறினார். நான் எனது இருசக்கர வாகனத்தில் முன்னே செல்ல அதனைதொடர்ந்து திரு.ராஜசேகரன் ஒரு இரு சக்கர வாகனத்தில் மற்றொரு நபர் ஓட்ட உடன் வந்தார். அவர்களை பின்தொடர்ந்து அவனியாபுரம் விஏஓ அவர்கள் மற்றொரு இருசக்கர வாகனத்தில் வந்தார். நான் அவர்களை எனது இடத்திற்கு சுமார் 12.00 மணிக்கு கூட்டிச்சென்று இடத்தை காண்பித்தேன். அங்கு வைத்து எனது இடத்திற்கான பத்திரங்களை என்னிடமிருந்து திரு.ராஜசேகரன் அவர்கள் பெற்று எனது இடத்தை பார்வையிட்டார். எனது இடத்தின் பின்புறத்தில் சற்று கருவேலை மரங்கள் வளர்ந்து இருந்ததால் திரு.ராஜசேகரன் அவர்கள் எனது இடத்தில் உள்ள அம்மரங்களை சுத்தம் செய்துவிட்டு அவர் ஏற்கனவே கூறியபடி புதிய மனு விண்ணப்பித்துவிட்டு அவரை வரும் 02.06.2025ம் தேதியன்று அவரது அலுவலகத்திற்கு வந்து சந்தித்து அவர் கேட்ட ரூ.3,000/-த்தை கொடுக்க கூறினார். பிறகு திரு.ராஜசேகரன் கூறியபடி கடந்த 31.05.2025ம் தேதியன்று மாலையில் ஆன்லைன் மூலமாக மீண்டும் எனது இடத்திற்கான புல எல்லைகளை அளப்பதற்காக விண்ணப்பித்த அதற்கான ஒப்புகை சீட்டை பெற்றேன். அதன் மனு எண்.2025/0123/24/016012 ஆகும். பிறகு நான் கடந்த 02.06.2025ம் தேதியன்று மாலை சுமார் 05.00 மணிக்கு அவரது அலுவலகத்திற்கு சென்று திரு.ராஜசேகரன் அவர்களை சந்தித்து, அவர் கூறியபடி புதிதாக ஆன்லைனில் விண்ணப்பித்த விவரத்தை கூறினேன். உடனே அவர் என்னிடம் நான் கேட்ட பணம் ரூ.3,000/-த்தை கொண்டு வந்துள்ளீர்களா எனக்கேட்டார். நான் கொண்டு வரவில்லை என்று கூறினேன். அப்போது, அவர் சரி நான் உங்கள் இடத்திற்கு வரும் வியாழக்கிழமை (05.06.2025) காலையில் வந்து அளந்து கொடுக்கிறேன். அப்போது, நீங்கள் எனக்கு ரூ.3,000/- கொடுத்துவிடுங்கள் எனக் கூறினார். நான் சரியென வந்துவிட்டேன். பின்பு மீண்டும் இன்று (04.06.2025) மாலை சுமார் 05.00 மணிக்கு நான்

திரு.ராஜசேகரன் அவர்களை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்து அவரிடம் எனது இடத்தை பணம் எதுவும் பெறாமல் அளந்து தரமுடியாதா எனக் கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் நான் நாளை காலை சுமார் 11.00 மணிக்கு உனது இடத்திற்கு வருகிறேன். அப்போது நீ நான் கேட்ட பணம் ரூ.3000/-த்தை என்னிடத்தில் அங்கு வைத்து கொடுத்தால் மட்டுமே நான் அளந்து அதற்கான சான்றிதழ்களை உனக்கு வழங்குவேன். இல்லையென்றால் நீங்கள் அலைந்து கொண்டு இருக்க வேண்டியதுதான் என மிகவும் கண்டிப்பாக கூறிவிட்டார். பிறகு நான் எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். எனக்கு லஞ்சம் கொடுப்பதில் விருப்பமில்லை. அதனால் இப்புகாரை தங்களிடம் கொடுக்கிறேன். எனது இடத்தினை புல எல்லைகளை அளந்து மேலே சொன்னவாறு சான்றிதழ் தருவதற்கு என்னிடம் இலஞ்சமாக பணம் ரூ.3,000/- கேட்கும் அவனியாபுரம் பிர்கா சர்வேயர் திரு.ராஜசேகரன் என்பவர் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கும்படி இம்மனுவை கொடுக்கிறேன். இத்துடன், கடந்த 31.05.2025-ம் தேதியன்று இது சம்பந்தமாக ஆன்லைனில் விண்ணப்பித்த ஒப்புகை சீட்டு (மனு எண். 2025/0123/24/016012), எனது பெயரில் பதிவு செய்யப்பட்ட மதுரை இணை சார்பதிவாளர் அலுவலகம் எண்-4 ஆவண எண்கள். 12266/2010, 5628/2024 மற்றும் ஆன்லைனில் பதிவிறக்கம் செய்த எனது இடத்திற்கான புலப்படம் ஆகியவற்றின் நகல்களை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும், அவனியாபுரம் பிர்கா சர்வேயர் திரு.ராஜசேகரன் என்னிடம் கேட்ட லஞ்சப்பணம் ரூ.3,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு (ஒ-ம்) **XXXXXX** 04/06/2025 (M.BALAMURUGAN)

Sir, Received the typed complaint on 04.06.2025 at 19.20 hrs, the genuineness of the complainant and the accused were verified through sources. The complainant is found to be genuine however, the integrity and antecedents of the accused is found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai Vigilance and Anti Corruption Cr. No. 10/2025 u/s 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 20.45 hrs and took up investigation. Sd./-XXXXXX (P.M. RAMESH PRABHU) 04/06/2025, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr. M.Balamurugan, S/o. Meenakshi Sundaram, Door No.4/5, A.A. Road, Rathinapuram, Madurai - 11 along with copy of Online Application Acknowledgement Petition No.2025/0123/24/016012, Sale deed No. 12266/2010 and Sale deed No.5628/2024 of Joint No.IV, Madurai Sub Registry and online print of FMB are herewith enclosed and submitted to the Hon'ble Principle District and Sessions Judge, Principal District and Sessions Court, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

(P.M. Ramesh Prabhu)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.
04/06/25